Individual

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – விருதுநகர் பதிவு மாவட்டம் – திருமதி.க.சுஜித்ரா என்பவர் கருணை அடிப்படையில் 30.09.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறை**

**அரசாணை (டி) எண்.43**

**நாள் 08.02.2024**
**சோபகிருது, தை - 25,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**
**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (டி) எண்.180, வணிகவரி மற்றும் பதிவுத் (கே) துறை, நாள் 30.08.2022.
3. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.36194/கே2/2016, நாள் 22.09.2022.
4. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.36194/கே2/2016, நாள் 02.01.2024.

-----------

**ஆணை:**

பதிவுத்துறையில், இராமநாதபுரம் பதிவு மாவட்ட கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிகையில், 23.12.1991 அன்று பணியிடை மரணமடைந்த திரு.க.கந்தசாமிதுரை என்பவரது மகள் திருமதி.க.சுஜித்ரா என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி 12.03.2009 அன்று மனு அளித்திருந்தார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி திருமதி.க.சுஜித்ரா என்பவரால் 12.03.2009 அன்று அளித்த மனு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அளிக்கப்படாததால், தனியர் பொருட்டு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவதற்கு ஏதுவாக, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வரையறுக்கப்பட்ட நிபந்தனை மற்றும் 2016-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்

Scanned with OKEN Scanner

பிரிவு 20(6)(b)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை ஆகியவற்றை தளர்த்தி தனியருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. எனவே, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திருமதி.க.சுஜித்ரா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பதிவுத்துறை தலைவரால் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக விருதுநகர் பதிவு மாவட்டத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.சுஜித்ரா 30.09.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திருமதி.க.சுஜித்ரா, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த 30.09.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பதிவுத்துறை தலைவர் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

4. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, இராமநாதபுரம் பதிவு மாவட்டம் கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிகையில், 23.12.1991 அன்று பணியிடை மரணமடைந்த திரு.க.கந்தசாமிதுரை என்பவரது மகள் திருமதி.க.சுஜித்ரா என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் விருதுநகர் பதிவு மாவட்டத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 30.09.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.
திருமதி.க.சுஜித்ரா, இளநிலை உதவியாளர்,
விருதுநகர் பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறைத்தலைவர், சென்னை-28 வழியாக)
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with OKEN Scanner

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28

மே.எ.எண்.36194/கே2/2016, நாள்.22.02.2024

அரசாணை (டி) எண்.43. வணிகவரி மற்றும் பதிவுத்(எம்2)துறை, நாள்.08.02.2024 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.க.சுஜித்ரா இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள விருதுநகர் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் S.S.L.C மதிப்பெண் சான்று அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப விருதுநகர் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

22/2/2024
மாவட்டப்பதிவாளர்

பெறுநர்
திருமதி.க.சுஜித்ரா, இளநிலை உதவியாளர்.
(விருதுநகர் மாவட்டப்பதிவாளர் மூலம்)

நகல்
1. மாவட்டப்பதிவாளர், விருதுநகர்.
(S.S.L.C அசல் மதிப்பெண் சான்றுடன் பதிவு எண்.097687/மார்ச் 2005)
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணைக் கோப்பு / தனி நகல் – 1.

Scanned with OKEN Scanner